# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆடி 13, திருவள்ளுவர் ஆண்டு – 2047

## 2016 ஜூலை 28, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வாய் எல்லாம் செயல்."*

*செய்யக்கூடிய வகையால், செல்லும் இடங்களில் எல்லாம் எக்காரணத்தாலும் இடைவிடாது, அறச் செயலை போற்றிச் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக தங்களிடம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதேபோல, சேலம் இரும்பாலை பிரச்சினை சம்பந்தமாக இந்த அவையில் பேச வேண்டுமென்று இன்று காலையிலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். எனவே, அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்ற வகையில் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கொடுத்திருக்கிற கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக துறையிடமிருந்து பதில் கேட்டிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். சேலம் இரும்பாலை பிரச்சினைக் குறித்த தீர்மானத்தை இன்று காலையில் 9-40 மணிக்குத்தான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துள்ளீர்கள். அதற்கும் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

## (ஆ) 27-7-2016 அன்றைய பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில பகுதிகளை நீக்குதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே, தங்களுடைய தீர்ப்பை அவைக் குறிப்பைப் படித்துவிட்டு வழங்குவதாகச் சொன்னீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேனே! அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தீர்ப்பைச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன், பேசாமல் இருங்கள்.*

## (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–
*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற முன்னுரிமை அளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடையநல்லூரிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான அரசுக் கல்லூரியை ஊருக்கு வெளியே, வனப் பகுதிக்கு மாற்றுவதைத் தவிர்த்து, நகர எல்லையிலே இருக்கும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூட வளாகத்திலேயே அமைத்து, பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற அரசு உதவிட மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிக் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

2016 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இன்று காலையில் 9-40 மணிக்குத்தான் என்னிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது கவன ஈர்ப்புதான். அதைத் துறைக்கு அனுப்பிவிட்டு, பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.*

## (இ) தேனி மாவட்டம், வருசநாடு, கடமலைக்குண்டு மலைப் பகுதி ஆதிவாசி பெண்கள்மீது வனத் துறையினர் நடவடிக்கை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், என்ன சொல்லுங்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருசநாடு மலை கிராமப் பகுதிகளிலே இருக்கும் ஆதிவாசி பெண்களை வனத் துறை அதிகாரிகள் ** விவாதிப்பது குறித்து ஏற்கெனவே தங்களிடம் நான் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று குறிப்பிட்ட வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்ற விஷயம் பற்றிப் பேசுங்கள். தேவையில்லாததைப் பற்றிப் பேச வேண்டாம்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *இதுகுறித்து தங்களிடம் ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது என்னவென்று பார்க்கிறேன்.*

## (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்– *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. டி. செங்குட்டுவன், என்ன? சொல்லுங்கள்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மையப் பகுதியில் ஓடக்கூடிய தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணிகுண்டு என்கிற இடத்திலே தடுப்பணைக் கட்டி, வலது, இடதுபுற கால்வாய்களை வெட்டி, காய்ந்துப் போயிருக்கிற ஏரிகளுக்கு எல்லாம் தண்ணீர் வழங்க வேண்டுமென்று கோரி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிறேன்.*

---

*** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள கூர்நோக்கு இல்லத்திலிருந்து சிறார்கள் வெளியே சென்றது சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதனுடைய நிலையை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எடுத்துக்கொள்கிறேன். 2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். (குறுக்கீடு)*

### (இ) தேனி மாவட்டம், வருசநாடு, கடமலைக்குண்டு மலைப் பகுதி ஆதிவாசி பெண்கள்மீது வனத் துறையினர் நடவடிக்கை குறித்து–*தொடர்ச்சி*

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் மலைவாழ் மக்களைப் பற்றி, வனத் துறைப் பற்றி பேசினார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், உங்களிடம் அதற்குப் பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கேட்டார், என்னிடம் பதில் தயாராக இருக்கிறது, சொல்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தகவல் கோரல் என்ற முறையில் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) பதில் பிறகு கொடுக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள் (குறுக்கீடு) இருங்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் பிரச்சினையை ஆரம்பிக்கிறீர்கள், உட்காருங்கள். நான் ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். நீங்கள் சொல்கிற மாதிரி என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) இந்த மாதிரி பேசுவது*